# කාර්ය සාධන වාර්තාව

# செயலாற்றுகை அறிக்கை

# PERFORMANCE REPORT



# 2018

## භාණ්ඩාගාර මෙහෙයුම් දෙපාර්තමේන්තුව

## திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்

## Department of Treasury Operations

මුදල් හා ජනමාධ්‍ය අමාත්‍යාංශය

කොළඹ 01

நிதி மற்றும் வெகுசன ஊடக

அமைச்சு கொழும்பு 01

Ministry of Finance and Mass Media

Colombo 01

## உள்ளடக்கம்


| | | பக்க இல. |
|---|---|---|
| ➢ | தொலை நோக்கு | 01 |
| ➢ | எமது பணி | 01 |
| 1. | அறிமுகம் | 02 |
| 2. | முக்கிய தொழிற்பாடுகள் | 02 |
| 3. | நிறுவனக் கட்டமைப்பு | 03 |
| 4. | பதவியணி தொடர்பான தகவல்கள் | 04 |
| 5. | மனித வள அபிவிருத்தி | 05 |
| 6. | சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்கள் | 07 |
| 7. | நிதிச் செயலாற்றுகை | 08 |
| 8. | பௌதிகச் செயலாற்றுகை | |
| 8.1 | காசு முகாமை | 10 |
| 8.2 | பொதுப் படுகடன் முகாமை | 14 |
| 8.3 | திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ள வரியற்ற வருமானம்சேகரித்தல் | 20 |
| 8.4 | திறைசேரி உத்தரவாதங்கள் | 21 |
| 8.5 | கடன் வழங்கல் | 21 |
| 8.6 | திறைசேரி தனிக் கணக்கு முறைமை | 22 |
| 8.7 | ஆதனக் கடன் உத்தரவாதத் திட்டம் | 24 |
| 8.8 | திறைசேரி நிதி முகாமை முறைமை (TFMS) | 24 |
| 8.9 | எதிர்கால சவால்களை வெற்றிகொள்வதற்கான உபாயங்கள் (ITMIS) | 25 |

## ➢ எமது நோக்கு

*“தென்னாசியப் பிராந்தியத்தில் மிகச் சிறந்த அரசாங்க நிதி முகாமையாளராகத் திகழ்தல்”*

## ➢ எமது பணி

*"திரட்டு நிதியத்திற்கும் ஏனைய திறைசேரி நிதியங்களுக்கும் சொந்தமான நிதிகளைக் கையாள்வதில் வினைத்திறனையும் சிக்கனத்தையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்காகவும் வெளிநாட்டுக் கடன்பெறுகைகள் உள்ளிட்ட நிதிக் கணக்கீட்டுக்கு தலைமைத்துவம் வழங்கும் அதவேளை அரசாங்க செலவினங்களை அரசிறைத் திட்டங்கள் மற்றும் கடன்பெறுகை நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஏற்ற வகையில் வரையறுப்பதற்காகவும் அர்ப்பணிப்புடன் செயற்படுதல்".*


## *1. அறிமுகம்*

*திறைசேரித் தொழிற்பாடுகள் திணைக்களமானது திரட்டு நிதியம் (திறைசேரி காசுப் பாய்ச்சல்), பொதுப் படுகடன் என்பவற்றின் முகாமையுடன் தொடர்புடைய விடயங்களைக் கையாள்வதற்கான வினைத்திறன்மிக்க நிறுவனம் ஒன்றை உருவாக்கும் நோக்கில் 2004 ஜூலை 28 ஆந் திகதி தாபிக்கப்பட்டது. இந்நோக்கத்தை நிறைவேற்றும் முயற்சியாக, தேசிய வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்படும் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினங்களை தொழிற்பாட்டு ரீதியான காசு உட்பாய்ச்சலாகவும் வெளிப்பாய்ச்சலாகவும் மாற்றுவதுடன் கடன்களூடாக நிதியிடப்பட வேண்டிய பற்றாக்குறைகளை அடையாளம் காணும் பணியை திறைசேரிச் செயற்பாட்டு திணைக்களம் மேற்கொள்கின்றது நிகழ்ச்சிகள். இத்திணைக்களத்தின் பொதுப் படுகடன் முகாமைத் தொழிற்பாட்டில் அரசாங்கத்தின் சார்பில் படுகடன் சேவை மற்றும் அறிக்கைப்படுத்தல் என்பனவும் உள்ளடங்கும்.*

## *2. முக்கிய தொழிற்பாடுகள்*

- *திறைசேரியின் காசுப் பாய்ச்சல் முகாமை*
- *கொடுப்பனவு முறைகளின் ஊடாக திறைசேரி நிதிகளைப் பகிர்ந்தளித்தல்.*
- *செலவீட்டு முகவரகங்களுக்கான நிதிகளை மதிப்பீடு செய்தல், முன்னுரிமைப்படுத்தல், விடுவித்தல்.*
- *திறைசேரி உத்தரவாதங்களை வழங்குதல்*
- *அரசாங்கத்தின் கடன் வழங்கும் நிகழ்ச்சித்திட்டங்களுடன் தொடர்புடைய நிதிப் பாய்ச்சல்களைப் பேணி வருதல்.*
- *இத்திணைக்களடம் ஒப்படைக்கபபட்டுள்ள வரியல்லா வருமானத் தலைப்புக்களுக்கான மதிப்பீடு, சேகரிப்பு மற்றும் கணக்கீடு*
- *வெளிநாட்டு உதவிக் கடன்கள் மற்றும் நன்கொடைகளின் கீழான நிதிகளின் விடுவிப்புக்கான ஏற்பாடுகளைச் செய்தல்.*
- *வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்களின் கணக்கீட்டுக்கான வசதி ஏற்பாடுகளைச் செய்தல்.*
- *அரசாங்கத்தின் கடன்பெறுகைகள் மற்றும் படுகடன் சேவைகளுக்கான கணக்கீடு.*
- *அரசாங்கத்தின் வங்கிக் கணக்குகளுக்கும் கட்டுநிதிக் கணக்குகளுக்கும் அதிகாரமளித்தலும் அவற்றை மேற்பார்வை செய்தலும்.*
- *அரசாங்க உத்தியோகத்தர் உத்தரவாதத் திட்டத்தை இயக்குதல்.*

# *3. நிறுவனக் கட்டமைப்பு*



## *4.* பதவியணி தொடர்பான தகவல்கள்

*அட்டவணை 4 .1 ஊழியர் பலம் 2018.12.31 இல் உள்ளவாறு*

| பதவி | அனுமதிக்கப்பட்டஊழியர் தொகை | தற்போதுள்ள ஊழியர் தொகை |
|---|---|---|
| பணிப்பாளர் நாயகம் | *01* | *01* |
| மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | *03* | *03** |
| இ.க.சே - வகுப்பு *I* | *09* | *08* |
| இ.க.சே - வகுப்பு *II/III* | *10* | *08* |
| இ.நி.சே. - வகுப்பு *III* | *01* | - |
| நிர்வாக உத்தியோகத்தர் | *01* | *01* |
| அபிவிருத்தி உதவியாளர் | *22* | *20*** |
| அரச முகாமைத்துவ உதவியாளர் - வகுப்பு *I/II/III* | *55* | *54* |
| தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம் உதவியாளர் | *01* | *01* |
| சாரதிகள் | *08* | *08* |
| அலுவலக உதவியாளர் - வகுப்பு *I/II/III* | *12* | *11* |
| மொத்தம் | *123* | *115* |

* இ.க.சேவையின் வகுப்பு *3* உத்தியோகத்தர் ஒருவர் முழுநேர அடிப்படையில் மேலதிகப் பணிப்பாளர் நாயகம் பதவியில் பதில் கடைமையில் ஈடுபடுகின்றார்.

** அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியின் கீழ் தற்போதுள்ள ஊழியர் தொகையில் *03.08.2018* ல் இருந்து நியமிக்கப்பட்ட பட்டதாரி பயிலுனர் ஒருவர் உள்ளடக்கப்பட்டுள்ளார்.

## *5. மனித வள அபிவிருத்தி*

*திணைக்கள ஊழியர்களின் அறிவு, திறன் மற்றும் மனப்பாங்குகளை மேம்படுத்துவதற்கான தொடர்ச்சியான முயற்சியின் ஒரு பகுதியாக, பல்வேறு ஆற்றல் விருத்தி நிகழ்ச்சி வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன. அவற்றின் விபரங்கள் கீழே அட்டவணையில் தரப்படுகின்றன.*

***உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி 2018***

*அட்டவணை 5.1 உள்நாட்டுப் பயிற்சிகள்*

| ஊழியர் வகுதி | பயிற்சிநெறிகளின் எண்ணிக்கை | பயிற்சியளிக்கப்பட்ட உத்தியோகத்தரின் எண்ணிக்கை | பயிற்சித் துறை | நிறுவனம்/ அமைவிடம் |
|---|---|---|---|---|
| பதவிநிலை உத்தியோகத்தர்கள் | 05 | 01<br>01<br>02<br>01<br>01 | தொழில் ரீதியான ஆங்கில டிப்ளோமா<br>அரச சேவையில் சரியான ஒருங்கிணைப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பான அறிவுரை.<br>தனிப்பட்ட சிக்கல் தொடர்பான பயிற்சிநெறி.<br>அரச வழங்கல்கள் மற்றும் ஒப்பந்தம் தொடர்பான ஒப்பந்தம்<br>தனிநபர் கோவை முகாமைத்துவம் | மிலோதா<br>இலங்கை பயிற்சி நிறுவனம்<br>ஹில்டன்<br>மிலோதா<br>மிலோதா |
| அரச முகாமைத்துவ உதவியாளர் | 07 | 02<br>02<br>01<br>02<br>01<br>03<br>01 | தொழில் தொடர்பான ஆங்கில சான்றிதழ்<br>எக்ஷல் பயிற்சிநெறி<br>சிகாஸ் பயிற்சி நெறி<br>அரச கணக்காய்வு ஐய வினாக்களுக்கு<br>பதில் எழுதுதல்.<br>அரச வழங்கல் முகாமைத்துவம்<br>கனிஷ்ட சேவையாளர்களுக்கான எக்செல்<br>பயிற்சி நெறி<br>விடுமுறை விடய உத்தியோகத்தரின்<br>கடமைகளும், பொறுப்புக்களும். | மிலோதா<br>மிலோதா<br>மிலோதா<br>மிலோதா<br>மிலோதா<br>மிலோதா<br>மிலோதா |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | 05 | 01<br>01<br>01<br>02<br>01 | கனிஷ்ட பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கான ஆங்கில டிப்ளோமா<br>எக்செல் பாடநெறி<br>அரச கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் எழுதுதல்<br>கோவை முகாமைத்துவம்,பொது அலுவலக நிர்வாகம் மற்றும் தாபன விதிக் கோவை<br>கனிஷ்ட சேவையாளர்களுக்கான எக்செல் பயிற்சி நெறி | மிலோதா<br>மிலோதா<br>மிலோதா<br>மிலோதா<br>மிலோதா |
| அலுவலக உதவியாளர் சேவை | 05 | 100 | அலுவலர் குழாமிற்கு அறிவூட்டுதல் தொடர்பான பயிற்சி நெறி. | திறைசேரி செயற்பாடுகள் திணைக்ளம். |

*மேற்குறிப்பிட்ட பயிற்சிகளுக்கு மேலதிகமாக திருகோணமலை மாகாண பயிற்சி நிலையத்தில் கார்திகை மாதம் 10 ம் மற்றும் 11ஆம் திகதி வரையான இரண்டு நாட் பட்டறை நடாத்தப்பட்டது, இதில் ஊழியர்களின் ஊழியர்களின் மனப்பான்மை மற்றும் திறன்களை மேம்படுத்தல் திணைக்கள ஊழியர்களுக்கிடையே சுய மேம்பாடு மற்றும் பரஸ்பர உறவுளை மேம்படுத்தல் தொடர்பான இவ் பட்டறையில் நூறு (100) ஊழியர்கள் பங்குபற்றி தமது ஆற்றலை பகிர்ந்து கொண்டனர்.*

அட்டவணை 5.2 2018 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட வெளிநாட்டுப் பயிற்சிகள் மற்றும் ங்குபற்றிய மாநாடுகள்.

| | பயிற்சி/கருத்தரங்கு அல்லது மன்றம் | சேவை வகை | நாடு | காலப்பகுதி | உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | இலங்கை அரச உத்தி:யோகத்தர்களுக்கான கடன் தொடர்பான வழிகாட்டல் பயிற்சி நெறி | பதவிநிலை உத்தியோகத்தர் | இந்தியா | 2018.01.11-2018.01.12 | 01 |
| 2 | சிக்கல் மற்றும் திறமை அபிவிருத்தி தொடர்பான பயிற்சியாளர்களுக்கு பயிற்சியளிக்கும் பாடநெறி | அபிவிருத்தி உத்தியோகத்தர்கள். | இந்தியா | 2018.01.22-2018.03.16 | 01 |
| 3 | நிலைத்திருத்தல் இணைய அரசு தீர்வு செயற்படுத்தல் பாடநெறி | பதவிநிலை உத்தியோகத்தர் | சிங்கப்பூர் | 2018.02.26-2018.03.02 | 08 |
| 4 | ப்ரி பெலன்ஸ் சர்வதேச செயற்பாடுகள் குழு மாநாடு | பதவிநிலை உத்தியோகத்தர் | அமெரிக்கா | 2018.03.14-2018.03.18 | 01 |
| 5 | கடன் முகாமைத்துவம், செயல் திறன் மதிப்பீடு பயிற்சி நெறி | பதவிநிலை உத்தியோகத்தர் | மலேசியா | 2018.03.19-2018.03.23 | 02 |
| 6 | நிதி முகாமைத்துவ உபாய வழிமுறைகள் தொடர்பான சர்வதேச வெளிப்படையான பயிற்சி நெறி | பதவிநிலை உத்தியோகத்தர்<br>அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>தகவல் தொழிநுட்ப உத்தியோகத்தர். | தாய்லாந்து | 2018.04.29-2018.05.06 | 07<br>01<br>01 |
| 7 | அரச கடன் முகாமைத்துவம் | பதவிநிலை உத்தியோகத்தர் | தாய்லாந்து | 2018.05.07-2018.05.12 | 01 |
| 8 | 2018ம் ஆண்டு அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் நிதி உபாய தொடர்பான அமைச்சர்களின் மாநாடு | பதவிநிலை உத்தியோகத்தர் | சீனா | 2018.06.11-2018.06.17 | 01 |
| 9 | அபிவருத்தியடைந்துவரும் நாடுகளில் வங்கி மற்றும் நிதி முகாமை தொடர்பான 2018 மாநாடு | பதவிநிலை உத்தியோகத்தர் | சீனா | 2018.07.04-2018.07.24 | 01 |
| 10 | வியாபாரம் மற்றும் நிலைத்திருத்தல் தொடர்பான பயிற்சி நெறி | அபிவிருத்தி உத்தியோகத்தர் | இந்தியா | 2018.07.09-2018.07.20 | 01 |
| 11 | அரச வழங்கல்கள் மற்றும் ஒப்பந்த நிர்வாகம் தொடர்பான டிப்ளோமா | அபிவிருத்தி உத்தியோகத்தர் | ஜப்பான் | 2018.09.09-2018.09.19 | 01 |
| 12 | கட்டுமானம் மற்றும் தொழிநுட்ப பூங்கா முகாமை தொடர்பான மாநாடு | அபிவிருத்தி உத்தியோகத்தர் | சீனா | 2018.09.24-2018.10.16 | 01 |
| 13 | அபிவிருத்தி அடைந்த நாடுகளில் சிரேஷ்ட உத்தியோகத்தர்களுக்கான வியாபார உதவி பயிற்சி நெறி | பதவிநிலை உத்தியோகத்தர் | சீனா | 2018.10.16-2018.10.29 | 01 |
| 14 | வெளிப்புற சமநிலை மதிப்பிடல் பயிற்சி | பதவிநிலை உத்தியோகத்தர் | இந்தியா | 2018.12.10-2018.12.12 | 01 |

## *6. சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்கள்*

*அரசாங்கத்தின் நிதி முகாமையை மேம்படுத்தும் நோக்கில் இத்திணைக்களம் 2018 ஆம் ஆண்டில் பின்வரும் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களை வெளியிட்டது.*

*அட்டவணை 6.1*

| திகதி | சுற்றறிக்கை இல. | தலைப்பு |
|---|---|---|
| 2018.05.14 | 01/2018 | 2019 ஆம் ஆண்டிற்கான வருமான மதிப்பீடு |
| 2018.05.24 | 02/2018 | 2018.06.30 அன்றுள்ளவாறு நிலுவை வருமான அறிக்கைகளை முன்வைத்தல் |
| 2018.06.12 | 3/2017(i) | 2018 ஆனி மாதம் 15 ஆம் திகதி ரம்ஜான் பண்டிகையின் காரணமாக 2018 ஆம் ஆனி மாத சம்பளத்தை முன்கூட்டி வழங்குதல் |
| 2018.07.26 | 03/2018 | தொழிற்படாத உத்தியோகபூர்வ வங்கிக் கணக்குகளை மூடிவிடுதல |
| 2018.09.06 | 04/2018 | 2019 ஆம் ஆண்டுக்கான சம்பளங்கள், சம்பள முற்பணங்கள், ஓய்வூதியங்கள் என்பவற்றைச் செலுத்துதல் |
| 2018.09.14 | 05/2018 | திறைசேரி செயற்பாடுகள் பணிப்பாளர் நாயகம் அவர்கள் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தராக நடவடிக்கை மேற்கொள்ளுகின்ற வருமான குறியீட்டின் கீழ் வருகின்ற வருமானங்களை திரட்டுதல், நிருவகித்தல் மேற்பார்வைசெய்தல் மற்றும் அறிக்கையை வைத்துக் கொள்ளுதல் |
| 2018.11.05 | 06/2018 | 2018 ஆம் ஆண்டிற்கான காசுப் புத்தகங்ளை மூடுதலும், கட்டுநிதிக் கணக்குளைத் தீர்தலும் |
| 2018.11.28 | 07/2018 | 2018.12.31 அன்றுள்ளவாறு நிலுவை வருமான அறிக்கைகளை முன்வைத்தல் |
| 2018.12.19 | 3/2017(ii) | 2018 மார்கழி மாதம் 25 ம் திகதி கிறிஸ்மஸ் பண்டகையின் காரணமாக கிறிஸ்தவ மத அரசாங்க ஊழியர்களுக்கு 2018 மார்கழிமாத சம்பளத்தை முன்கூட்டி வழங்குதல் |

## 7. நிதிச் செயலாற்றுகை - 2018

அட்டவணை 7.1  7.1

ரூபா '000

| விடயம் | வகை/பொருள்/விடயம்/விபரம் | 2017 | | 2018 | | 2017 ஆம் ஆண்டின் உண்மைச் செலவினங்களின் அடிப்படையில் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பீடு | உண்மையான | மதிப்பீடு | உண்மையான | 2018 ஆம் ஆண்டின் செலவின அதிகரிப்பு (வீழ்ச்சி) | செலவின வேறுபாட்டு வீதம் (%) |
| | **மீளெழும் செலவுகள்** | **963,736** | **926,838** | **1,285,985** | **1,120,718** | **164,579** | **17.76** |
| | **தனியாள் வேதனாதிகள்** | **75,650** | **67,104** | **73,610** | **72,785** | **5,681** | **8.47** |
| 1001 | சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் | 41,000 | 38,593 | 45,700 | 45,561 | 6,968 | 18.06 |
| 1002 | மேலதிக நேர மற்றும் விடுமுறைக் கொடுப்பனவுகள் | 650 | 640 | 950 | 927 | 287 | 44.84 |
| 1003 | ஏனைய படிகள் | 34,000 | 27,871 | 26,960 | 26,297 | (1,574) | (5.65) |
| | **பிரயாணச் செலவுகள்** | **3,330** | **3,089** | **1,615** | **674** | **(2,415)** | **(78.18)** |
| 1101 | உள்நாட்டு | 130 | 129 | 215 | 204 | 75 | 58.14 |
| 1102 | வெளிநாட்டு | 3,200 | 2,960 | 1,400 | 470 | (2,490) | (84.12) |
| | **வழங்கல்கள்** | **4,250** | **4,172** | **5,300** | **5,198** | **1,026** | **24.59** |
| 1201 | எழுது பொருட்கள் மற்றும் அலுவலகத் தேவைகள் | 2,200 | 2,174 | 2,500 | 2,497 | 323 | 14.86 |
| 1202 | எரிபொருள் | 1,970 | 1,919 | 2,700 | 2,602 | 683 | 35.59 |
| 1203 | உணவு மற்றும் சீருடைகள் | 80 | 79 | 100 | 99 | 20 | 25.32 |
| | **பராமரிப்புச் செலவினம்** | **3,220** | **2,285** | **3,531** | **3,502** | **1,217** | **53.26** |
| 1301 | வாகனம் | 2,400 | 1,926 | 2,881 | 2,858 | 932 | 48.39 |
| 1302 | பொறி இயந்திரம் மற்றும் உபகரணங்கள் | 500 | 285 | 500 | 498 | 213 | 74.74 |
| 1303 | கட்டடங்கள் மற்றும் கட்டமைப்புக்கள் | 320 | 74 | 150 | 146 | 72 | 97.30 |
| | **சேவைகள்** | **4,790** | **3,671** | **4,579** | **4,509** | **838** | **22.83** |
| 1401 | போக்குவரத்து | 2,400 | 1,863 | 2,400 | 2,399 | 536 | 28.77 |
| 1402 | தபால் மற்றும் தொடர்பாடல் | 2,200 | 1,626 | 2,019 | 1,952 | 326 | 20.05 |
| 1405 | ஏனையவை | 190 | 182 | 160 | 158 | (24) | (13.19) |
| | **மாற்றல்கள்** | **866,676** | **840,697** | **1,162,228** | **998,929** | **158,232** | **18.82** |
| 1503-01 | லொத்தர் அபிவிருத்தி மானிய அளவீடுகளின் மீளளிப்பு | 365,676 | 339,747 | 460,978 | 297,686 | (42,061) | (12.38) |
| 1505-01 | அரசாங்க ஊழியர் காப்புறுதித் திட்டத்திற்கான அரசாங்கத்தின் பங்களிப்பு | 500,000 | 500,000 | 700,000 | 700,000 | 200,000 | 40.00 |
| 1506 | அரசாங்க ஊழியர்களின் சொத்துக் கடன்களுக்கான வட்டி | 1,000 | 950 | 1,250 | 1,243 | 293 | 30.84 |
| | **ஏனைய மீளெழும் செலவினங்கள்** | **5,820** | **5,820** | **35,122** | **35,121** | **29,301** | **503.45** |
| 1701 | நட்டங்கள் மற்றும் பதிவழிப்புக்கள் | 5,820 | 5,820 | 35,122 | 35,121 | 29,301 | 503.45 |

*ரூபா '000*

| விடயம் | வகை/பொருள்/ விடயம்/விபரம் | 2017 | | 2018 | | 2017 ஆம் ஆண்டின் உண்மைச் செலவினங்களின் அடிப்படையில் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பீடு | உண்மையான | மதிப்பீடு | உண்மையான | 2018 ஆம் ஆண்டின் செலவின அதிகரிப்பு (வீழ்ச்சி) | செலவின வேறுபாட்டு வீதம் (%) |
| | மூலதனச் செலவினம் | 9,500 | 3,598 | 7,400 | 6,453 | 2,855 | 79.35 |
| | **மூலதன சொத்துக்களின் புனரமைப்பும் மேம்பாடும்** | **2,700** | **1,456** | **2,900** | **2,749** | **1,293** | **88.80** |
| *2001* | கட்டடப் புனரமைப்பும் மேம்பாடும் | 100 | - | 1,100 | 1,090 | 1,090 | 100.00 |
| *2002* | பொறி இயந்திரம் மற்றும் உபகரணங்கள் | | | | | | |
| *2002-1* | திறைசேரி தனிக் கணக்கு முறைமையின் அமுலாக்கம் | 1,500 | 981 | 1,000 | 981 | - | - |
| *2002-2* | ஏனையவை | 100 | 41 | 100 | - | (41) | (100.00) |
| *2003* | வாகனம் | 1,000 | 434 | 700 | 678 | 244 | 56.22 |
| | **மூலதனச் சொத்துக்களின் கையகப்படுத்தல்** | **5,000** | **377** | **1,000** | **801** | **424** | **112.47** |
| *2102* | தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 5,000 | 377 | 1,000 | 801 | 424 | 112.47 |
| | **மனித வள அபிவிருத்தி** | **1,800** | **1,765** | **3,500** | **2,903** | **1,138** | **64.48** |
| *2401* | பயிற்சியும் திறன்விருத்தியும் | 1,800 | 1,765 | 3,500 | 2,903 | 1,138 | 64.48 |

## *8. பௌதிகச் செயலாற்றுகை*

### *8.1 காசு முகாமை*

### *8.1.1 திறைசேரி காசுப் பாய்ச்சல் முகாமை*

*காசு பாய்ச்சல் முகாமைத்துவம் என்பது அரசாங்க கொள்கை ஆவணத்தை அல்லது அரசாங்க வரவுசெலவு திட்டத்தை செயற்படுத்துவதற்கான ஒருவேலைத்திட்டம். மக்களுக்கு சேவைகளை வழங்கவும் மேலும் தேவையான பொது முதலீடுகளை பெற்றுக்கொள்ள பொருளாதாரத்திற்கு தேவையான தந்திரோபாய அலகுகளில் வளங்ளை ஒதுக்கீடு செய்வதன் மூலம் அரசாங்க் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு உதவுகிறது. அதன்படி திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் கணிக்கப்பட்ட பணிகளான வரவுசெலவு திட்டத்தில் குறிப்பிடப்பட்ட அரச வருவாயை மதிப்பீடு செய்தல் மற்றும் வசூழிக்க உதவுதல் அமைச்சுக்கள் திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களில் பயனுள்ள மற்றும் திறமையாக இயங்கும்செலவீடு நிறுவனங்களுக்கிடையில் வருவாயை மறுகட்டமைத்தல்.*

*வரவுசெலவு திட்ட இலக்குகளை திறம்பட மற்றும் செயற்திறன் மிக்க வகையில் நிறைவேற்றுவதற்காக திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் செயற்படுகிறது. அரச காசுப்பாய்ச்சல் முகாமைத்துவ நடவடிக்கைகளில் கவனம் செலுத்தும் நோக்குடன் வரவசெலவு திட்ட நிறைவேற்றுமுகவர்களின் பணத்தேவைகளை முன்னுரிமை அடிப்படையில் வழங்குவதுடன் மற்றும் நிதியாண்டில் செலவினங்களை குறைப்பதும் ஆகும். வருவாய் வசூல் முகவர்கள் இல்லாததால், தங்கள் வருவாய் சேகரிப்பு இலக்குகள் மற்றும் சேகரிப்பு மாதிரியில் ஏற்பட்ட தளம்பல்கள் காரணமாக செலவீட்டு முகவர்களுக்கு தேவையான பணத்தேவையை பூர்த்தி செய்வதற்கான கடினமான சவால்களை திணைக்களம் எதிர்கொள்கிறது.*

*பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டவாறான 2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டம், முக்கியமான வருமானச் சேகரிப்பு முகவர்கள் மற்றும் செலவீட்டு முகவர்களிடமிருந்த சேகரிக்கப்பட்ட ஏனைய மாறுபடும் காரணிகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு, 2018 ஆம் ஆண்டுக்கான மதிப்பிடப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்றுக்களை மாதாந்த விபரங்களுடன் திறைசேரிச் செயற்பாட்டு திணைக்களம் தயாரித்தது. பொருத்தமான முறையில் அரசாங்கத்திற்கு மிகக் குறைந்த செலவை ஏற்படுத்தும் விதத்தில் கடன்களைப் பெறுவதற்காக இத்தகவல்களை அடிப்படையாகக் கொண்டு மதிப்பிடப்பட்ட கடன்பெறுகை நிகழ்ச்சியும் தயாரிக்கப்பட்டது. மேலும், பொதுப் படுகடன் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி என்பவற்றின் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதன் மூலம், அரசாங்கத்தின் கடன்பெறுகைச் சாதனங்களின் விநியோகத்தின் வெளிப்படைத் தன்மையை மேம்படுத்துவதற்கான ஒரு நடவடிக்கையாக, இத்திணைக்களம் ஒரு முன்னோக்கிய காலாண்டுக்கான கடன்பெறுகை நாட்காட்டியைத் தயாரிக்க ஆரம்பித்தது.*

*அட்டவணை : 8.1 அரசாங்க திறைசேரி காசுப் பாய்ச்சல் தொழிற்பாடுகள் - 2018*

*ரூபா பில்லியன்*

| விடயம் | 2017 | 2018 | |
|---|---|---|---|
| | **உண்மையான** | **மதிப்பீடு** | **உண்மையான** |
| *ஜனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறான ஆரம்பக் காசு மீதி* | *(160.3)* | *(186.2)* | *(186.2)* |
| வருமானம் மற்றும் ஏனைய கிடைப்பனவுகள் மூலமான மொத்தக் காசு உட்பாய்ச்ச□ ◌் | *1,765.3* | *2,144.9* | *1870.2* |
| *மீளெழும் கொடுப்பனவுகளுக்கான மொத்தக் காசு வெளிப்பாய்ச்சல்* | *(1,853.6)* | *(2,102.2)* | *(2,000.7)* |
| மூலதனக் கொடுப்பனவுகளுக்கான மொத்தக் காசு வெளிப்பாய்ச்சல்* | *(646.1)* | *(819.9)* | *(594.0)* |
| தேசிய காசு மிகை/ (பற்றாக்குறை) | *(734.4)* | *(777.2)* | *(724.5)* |
| மொத்தக் கடன்பெறுகைகள□* | *1,564.5* | *1927.2* | *1853.9* |
| படுகடன் மீளளிப்பு | *(868.9)* | *(1,150.0)* | *(1,232.3)* |
| தேறிய கடன்பெறுகை | *695.6* | *777.2* | *621.6* |
| செம்மையாக்கல் கணக்கு மீதி *(TEB,* தேறிய வைப்புக்கள், போன்றவை) | *12.9* | - | *14.9* |
| *டிசம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான முடிவுக் காசு மீதி* | *(186.2)* | *(186.2)* | *(274.2)* |

*மூலம்: திறைசேரி தொழிற்பாட்டுத் திணைக்களம்*

*வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்- 2018 .12.31 ல் CS-DRMS அறிக்கை*

*இவ்வருடத்தில் வருமானம் மற்றும் ஏனைய கிடைப்பனவுகள் மூலமான திறைசேரியின் காசு உட்பாய்ச்சல் 1,870.20 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட அதேவேளை மீளெழும் மற்றும் மூலதனக் கொடுப்பனவுகளுக்கான வெளிப்பாய்ச்சல் 2,594.7 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட போது காசுப்பற்றாக்குறை 724.5 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. இதன்படி 2017 ஆம் ஆண்டின் இதேகாலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் குறிப்பிட்ட காலப்பகுதியில் தேறிய காசுப்பற்றாக்குறை 9.9 பில்லியன் ரூபாவாகக் குறைவடைந்து காணப்பட்டது.தேறிய காசுப்பற்றாக்குறையில் ஏற்பட்ட குறைவுக்கு காரணம் வருமானம் அதிகரித்த்துடன் மேலும் 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018 ஆம் ஆண்டில் படுகடன் மீள்கொடுப்பனவு 868.9 பில்லியன் ரூபாவாக இருந்து 1,232.3 பில்லியன் ரூபாவாக அதிகரித்ததுடன் மூலதன செலவுக்கான காசு வெளிப்பாய்ச்சல் 8.1 சதவீதத்தால் குறைவடைந்து காணப்பட்டது. இதன் வெளிப்பாடு 2017 ஆம் ஆண்டு இறுதியில் உள்ளவாறான ஒட்டுமொத்த வங்கிக் காசு மீதி பற்றாக்குறை 31.12.2018 ஆம் ஆண்டில் உள்ளவாறான ஒட்டுமொத்த வங்கி காசு மீதி பற்றாக்குறையானது முறையே 186.2 பில்லியன் ரூபாயில் இருந்து 274.2 பில்லியன் ரூபாவாக அதிகரித்து காணப்பட்டது.*

### *8.1.1.1 திறைசேரி காசு உட்பாய்ச்சல்*


*பொதுத் திறைசேரியின் 2018 ஆம் ஆண்டுக்கான காசு உட்பாய்ச்சல் 1870.2 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. வரியல்லா வருமானம், வரி வருமானம் மற்றும்,வெளிநாட்டு கொடைகள் ஆகிய மூன்றுமே திறைசேரியின் காசு உட்பாய்ச்சலுக்கான பிரதான மூன்று மூலங்களாக உள்ளன. முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்தச் சேகரிப்பு 5.9 சதவீத அதிகரிப்பாகும். மொத்த வருமானச் சேகரிப்பு இவ்வருடத்தின் வருடாந்த மதிப்பிட்டில் 87.2 சதவீத மட்டத்ததை அடைந்திருந்த அதேவேளை மொத்த வருமானத்தில் 90.1 சதவீதம் வரிகள் மூலம் சேகரிக்கப்பட்டது. 2014-2018 வரையான ஐந்த வருட காலத்திற்கான வரி வருமானச் சேகரிப்பு அட்டவணை 8.2 இல் காட்டப்பட்டுள்ளது. அது 987.7 பில்லியன் ரூபாவில் 1685.3பில்லியன் ரூபா வரை 70.6 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. 2015 ஆம் ஆண்டின் பின்னர் மொத்த வருமானத்திற்கான கொடைக் கிடைப்பனவுகள் தொடர்ச்சியாகக் குறைந்து வரும் போக்கைக் கொண்டுள்ளது. இதற்குப் பிரதான காரணம் இலங்கை நடுத்தர வருமானம் கொண்ட ஒரு நாடாகத் தரமுயர்த்தப்பட்டமையாகும். எவ்வாறாயினும், 2017 முதல் 2018 வரையான காலப்பகுதியில் நாடு பல்வேறு இயற்கை அனர்த்தங்களை எதிர்நோக்கியதனால் அனர்த்த நிவாரணங்கள் கிடைக்கப் பெற்றமையினால் கொடைகளின் கிடைப்பனவு அதிகரித்திருந்தது.மேலும் 2018 ம் ஆண்டில் மூலதன* சொத்து விற்பனை பெறுமதியான ரூபா. 107.0 பில்லியனில் 43.8 பில்லியன் *திறசேரி காசுப்பாய்ச்சல* தேவைக்காக நிதி வருடத்தினுள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

*அட்டவணை: 8.2 2014-2018 காலப்பகுதிக்கான வருமான சேகரிப்பு* *ரூபா பில்லியன்*

| | ***2014*** | ***2015*** | ***2016*** | ***20□□*** | ***2018*** |
|---|---|---|---|---|---|
| வரி வருமானம் | *987.7* | *1,270.1* | *1,446.4* | *1,645.3* | *1,685.3* |
| வரியல்லா வருமானம் | *97.2* | *63.0* | *168.3* | *117.4* | *139.1* |
| நன்கொடை | *2.5* | *1.5* | *1.5* | *2.6* | *2.0* |
| ஹமபாந்தோட்டை வருமானம் செலவு | - | - | - | | *43.8* |
| மொத்தம் | *1,087.4* | *1,334.6* | *1,616.2* | *1,765.3* | *1,870.2* |

*மூலம்: திறைசேரி தொழிற்பாட்டுத் திணைக்களம் (காசு முகாமை)*

*வரைபு 8.1 2014-2018 காலப்பகுதிக்கான வருமான சேகரிப்பு*




### *8.1.1.2 திறைசேரி காசு வெளிப்பாய்ச்சல்கள்*

*அட்டவணை 8.3 இல் விளக்கப்பட்டுள்ள 2018 ஆம் ஆண்டின் மொத்தக் காசு வெளிப்பாய்ச்சலுக்கு இணங்க, 2017 ஆம் ஆண்டில் இதே காலப் பகுதியுடன் ஒப்பிடுகையில் பல்வேறு செலவீட்டு முகவர்களுக்கான மீள எழும் செலவினங்களின் விடுவிப்புக்கள் முறையே 3.8 சதவீதத்தாலும் அதிகரிக்க மூலதன செலவுக்கான விடுவிப்புகள் 1.9 சதவீதத்தாலும் குறைந்துள்ளது. மீளாய்வாண்டில் காசு வெளிப்பாய்ச்சலின் மொத்த உள்ளடக்கத்தைக் கவனத்தில் எடுக்கையில், மொத்த விடுவிப்புக்களில் 59.2 சதவீதம் அரச துறை சம்பளம் மற்றும் சமூர்த்தி, ஓய்வூதியம் மற்றும் சிறுநீரக நோயாளிகளுக்கான உதவி போன்ற சமூக நலனோம்பல் நிகழ்ச்சிகளுக்கான பங்களிப்பாக விடுவிக்கப்பட்டுள்ளது.*

*அட்டவணை: 8.3 காசு விடுவிப்புக்கள் - மூலதனம் மற்றும் மீளெழும்/ முகவர்களின் அடிப்படையில் - 2015 முதல் 2018*

*(ரூபா பில்லியன்)*

| நிறுவனம் | 2015 | | 2016 | | 2017 | | 2018 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மீளெழும் | மூலதனம் | மீளெழும் | மூலதனம் | மீளெழும் | மூலதனம் | மீளெழும் | மூலதனம் |
| விசேட செலவீட்டு அலகுகள் | 10.2 | 1.7 | 7.2 | 2.6 | 9.3 | 3.3 | 11.8 | 2.9 |
| அமைச்சுக்கள் | 234.7 | 173.4 | 224.1 | 185.7 | 239.3 | 230.5 | 242.6 | 219.2 |
| திணைக்களம் | 579.3 | 72.0 | 594.8 | 64.5 | 611.7 | 81.0 | 625.9 | 76.0 |
| மாவட்ட செயலகங்கள் | 40.2 | 44.0 | 44.5 | 49.7 | 50.1 | 47.3 | 48.4 | 57.5 |
| மாகாண சபைகள் | 167.5 | 21.7 | 169.0 | 15.7 | 165.5 | 23.8 | 180.2 | 16.0 |
| பல்கலைக்கழகங்கள் | 26.8 | 9.6 | 29.1 | 22.0 | 31.1 | 17.5 | 37.2 | 21.0 |
| ஏனைய சபைகள் மற்றும் கூட்டுத்தாபனங்கள் | 21.1 | 19.5 | 23.3 | 14.3 | 24.4 | 11.8 | 28.6 | 14.5 |
| | **1,079.6** | **341.8** | **1,092.1** | **354.4** | **1,131.3** | **415.0** | **1,174.6** | **407.1** |

மூலம்: திறைசேரி தொழிற்பாட்டுத் திணைக்களம் (திரட்டு நிதி முகாமைத்துவம் )

### *8.2 பொதுப் படுகடன் முகாமை*

#### *8.2.1 அரசாங்கத்தின் கடன்பெறுகை நிகழ்ச்சித் திட்டம் - 2018*

*வரவு செலவுத் திட்டத்தின் கீழ் வள இடைவெளிக்கு நிதியீட்டம் செய்வதற்காக 2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழ் மொத்த கடன்பெறுகை வரையறையாக 1,893 பில்லியன் ரூபாவுக்கு பாராளுமன்றம் அனுமதி வழங்கியது.*

*இவ்வருடத்தில் பதிவாகிய உண்மையான கடன்பெறுகை 1,881 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. இதில் உள்நாட்டு மூலங்கங்களிலிருந்து பெறப்பட்ட 1,109 பில்லியன் ரூபாவும் வெளிநாட்டு மூலங்களிலிருந்து பெறப்பட்ட 772 பில்லியன் ரூபாவும் அடங்கும்.வெளிநாட்டு மூலங்களிலிருந்து பெறப்பட்ட கடன்பெறுகைகளில் வெளிநாட்டுச் சந்தையில் விநியோகிக்கப்பட்ட 391 பில்லியன் ரூபா பெறுமதியான சர்வதேச நாணய முறிகள், 171 பில்லியன் ரூபா வெளிநாட்டு நிதி நிபந்தனைக் கடன்கள், அபிவிருத்திக் கொள்கை, செயற்திட்ட மற்றும் நிகழ்ச்சித்திட்டக்கடன் 210 பில்லியன் ரூபா என்பன உள்ளடங்கும். 2018 ஆம் ஆண்டின் மொத்தக் கடன்பெறுகை 1,881 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. இது 2017 ஆம் ஆண்டின் 1,620 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 16 சதவீத அதிகரிப்பாகும்.*

உண்மையான மொத்த உள்நாட்டுக் கடன்பெறுகைகள் *2017* ஆம் ஆண்டின் *1018* பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் *2018* ஆம் ஆண்டில் *9* சதவீதத்தால் அதிகரித்து *1109* பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. இதுகடன் சேவை கொடுப்பனவுக்காக வழங்கப்பட்ட திறைசேரி முறிகள் மற்றும் ***FCBU*** கடன்கள் ஆகும்.

*அட்டவணை 8.4 அரச கடன் பெறுகை வரையறை மற்றும் பயன்பாடு (ரூபாய் மில்லியன்)*

| | **2017** | | **2018** | |
|---|---|---|---|---|
| **விடயம்** | **அனுமதிக்கப்பட்ட வரையறை** | **பயன்பாடு** | **அனுமதிக்கப்பட்ட வரையறை** | **பயன்பாடு** |
| **மொத்தக் கடன்பெறுகைகள்** | ***1,629.000*** | ***1,619.625*** | ***1,893,844*** | ***1,880,706*** |
| உள்நாட்டு | *1,179.000* | *1,018.320* | *1,313,844* | *1,109,098* |
| வெளிநாட்டு | *450.000* | *601.305* | *580,000* | *771,608* |
| **மொத்த நிதியீட்டம்** | ***1,629.000*** | ***1,619.625*** | ***1,893,844*** | ***1,880,706*** |

*மூலம்: திறைசேரி தொழிற்பாட்டுத் திணைக்களம்*

### *8.2.2 உள்நாட்டு நிதியீட்டம்*


#### *8.2.2.1 நிலுவையாகவுள்ள உள்நாட்டுப் படுகடன்*

*2018 ஆம் ஆண்டின் இறுதி வரையிலான உள்நாட்டுப் படுகடன், திறைசேரி முறிகள், திறைசேரி உண்டியல்கள், இலங்கை அபிவிருத்தி முறிகள் என்பன முறையே 69.9 சதவீதத்தையும், 12.2 சதவீதத்தையும் 9.9 சதவீதத்தையும் கொண்டிருந்தன. மீதமுள்ள பகுதி, இலங்கை மத்திய வங்கியிடமிருந்து பெறப்பட்ட தற்காலிகமாக முற்பணங்கள் (3.2 சதவீதம்), ரூபாக் கடன்கள் (0.4 சதவீதம்) FCBU (1.9 சதவீதம்) ஏனைய கடன்கள் (2.5 சதவீதம்) என்பவற்றின் மூலம் பெறப்பட்டிருந்தது.*

*2018* வருடத்தில் திறைசேரி முறி அளவு முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் திறைசேரி முறிகளின் இருப்புக்கள் *2.6* சதவீதத்தால் அதிகரித்துள்ளது. அதிக செலவுள்ள குறுகிய கால கடன்பெறுகளை விட நீண்ட நிதியீட்டத்தை நோக்கி திரும்புவதில் அரசாங்கம் கவனம் செலுத்தியமையினால் *2017* ஆம் ஆண்டின் இறுதியில் *12.1* சதவீதமாகக் காணப்பட்ட திறைசேரி உண்டியல்களின் பங்கு *2018* ஆம் ஆண்டின் இறுதியில் *12.2* சதவீதமாகக் அதிகரித்துள்ளது. மேலும் முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் நிலுவையாகவுள்ள இலங்கை அபிவிருத்தி முறிகள் *0.4* சதவீதத்தால் சிறிய குறைவினை காட்டுகின்றது.

வரைபடம் - 8.2

உள்நாட்டு கடன் நிலுவை




***8.2.2.2 உள்நாட்டுப் படுகடன் சேவைக் கொடுப்பனவுகள்***

*அரசாங்கத்தின் படுகடன் சேவைக் கொடுப்பனவுகள், 2017 ஆம் ஆண்டில் பதிவாகிய 1,245 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 2018 ஆம் ஆண்டில் 28 சதவீதத்தால் அதிகரித்து 1,597 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. மொத்தப் படுகடன் சேவைக் கொடுப்பனவில் மீளகொடுப்பனவு 929 பில்லியன் ரூபாவாக (58 சதவீதமாக) காணப்பட்ட அதேவேளை மீதி 668 பில்லியன் ரூபா (42 சதவீதம்) வட்டிக் கொடுப்பனவாகக் காணப்பட்டது. முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் 2018 ஆம் ஆண்டில் உள்நாட்டுப் படுகடன்களுக்கான மீளளிப்புக் கொடுப்பனவுகள் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் முறையே 281 பில்லியன் ரூபாவினாலும் 71 பில்லியன் ரூபாவினாலும் அதிகரித்தது.*

*அட்டவணை 8.5 உள்நாட்டுப் படுகடன் சேவைக் கொடுப்பனவுகள்*

*(ரூபா மில்லியன்)*

| வருடம் | மூலதனக் கொடுப்பனவுகள் | வட்டிக் கொடுப்பனவுகள் | மொத்தம் |
|---|---|---|---|
| *2017* | *648,134* | *597,020* | *124,5154* |
| *2018* | *929,346* | *667,658* | *159,7004* |

*மூலங்கள்: திறைசேரித் தொழிற்பாடுகள் திணைக்களம்*

### *8.2.3* வெளிநாட்டு நிதியீட்டம்

வெளிநாட்டு நிதியீட்டமானது வரவுசெலவுத் திட்டத்தின் பற்றாக்குறை நிதியீட்டத்திற்கான ஒரு மூலம் என்ற வகையில் ஒரு முக்கியமான வகிபாகத்தை ஆற்றுகின்றது. அது பொருளாதாரத்தின் இலக்காகக் கொள்ளப்பட்ட வளர்ச்சிக்கு உதவுவதற்குத் தேவையான முதலீட்டு மட்டங்களைப் பூர்த்திசெய்வதற்காக உள்நாட்டுச் சேமிப்பு முதலீட்டு இடைவெளிக்கான பாலமாகத் தொழிற்படுகினற்து வெளிநாட்டு நிதியீட்டமானது பிரதானமாக வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் வெளிநாட்டுக் கொடைகள் என்ற இரு வகைகளில் கிடைக்கப் பெற்றன. அதற்கிணங்க, *2018* ல் வெளிநாட்டு கடன் *771.5* பில்லியன் ரூபாவும், வெளிநாட்டு நன்கொடை 12.5 பில்லியன் வெளிநாட்டுக் கொடைகளும் அடங்கும். முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில், வெளிநாட்டுக் கடன்களும் கொடைகளும் *2018* ஆம் ஆண்டில் முறையே *28.3* சதவீதத்தாலும் *55.7* சதவீதத்தாலும் அதிகரித்துள்ளன.


### *8.2.3.1* வெளிநாட்டுக் கடன்கள்

மொத்த வெளிநாட்டுக் கடன்கள் *2018* ஆம் ஆண்டிலும் *391* பில்லியன் ரூபா நாணய முறிகளையும், *171* பில்லியன் ரூபா வெளிநாட்டு நியதி நிதியீட்ட வசதியையும் *(FTFF) 210* பில்லியன் ரூபா அபிவிருத்திக் கொள்கைச் செயற்திட்ட மற்றும் நிகழ்ச்சித்திட்டக் கடன்களையும் கொண்டிருந்தது.சர்தேச நாணய முறிகள் அதிகரிப்புக்கான முக்கியமான காரணம் சாதகமான சொற்பிரயோகம் மற்றும் ஒப்பீட்டளவில் நடுத்தர நீண்ட கால தற்கால நிலமை.

அட்டவணை *8.6* : வெளிநாட்டுக் கடன்பெறுகைகளின் உள்ளடக்கம் *2014-2018* சாதனங்களின் அடிப்படையில்
ரூபா பில்லியன்

| கடன் மூலம் | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|---|
| சர்வதேச நாணய முறிகள் | 195.2 | 298.5 | 217.9 | 228.5 | 390.8 |
| நியதிக் கடன் நிதியீட்ட வசதி | - | - | 101.8 | 152.7 | 170.9 |
| அபி. கொள்கைச் செயற்திட்ட மற்றும் நிகழ்ச்சித்திட்டக் கடன்கள் | 227.3 | 257.9 | 254.5 | 220.1 | 209.8 |
| **மொத்தம்** | **422.5** | **556.4** | **574.2** | **601.3** | **771.5** |

வரைபு *8.3* வெளிநாட்டு கடன்




*மூலம்: திறைசேரி தொழிற்பாட்டுத் திணைக்களம்*

***8.2.3.1.1 வெளிநாட்டுப் படுகடன் சேவைக் கொடுப்பனவுகள்***


*2017* ஆம் ஆண்டில் வெளிநாட்டு கடன் வழங்கல் கொடுப்பனவு *357.8 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டதுடன் 2018* ஆம் ஆண்டில் *491.5* பில்லியன் வரை 37.4 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.மொத்த வெளிநாட்டு கடன் சேவை கொடுப்பனவுகளில் *307 பில்லியன்* வெளிநாட்டுக் கடன் *மீள்* கொடுப்பனவு செய்யப்படுவதுடன் மிகுதி பணம் 184.5 *பில்லியன் ரூபா வட்டிக் கொடுப்பனவாகக் காணப்பட்டது. முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் 2018 ஆம் ஆண்டில் வெளிநாட்டுப் படுகடன்களின் மூலதன மீள்கொடுப்பனவுகள் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் முறையே 87.7 பில்லியன் ரூபாவினாலும் 46 பில்லியன் ரூபாவினாலும் அதிகரித்துள்ளன.*

*அட்டவணை 8.7: வெளிநாட்டுப் படுகடன் சேவைக் கொடுப்பனவுகள் 2014 – 2018*

*ரூபா பில்லியன்*

| வருடம் | அசல் தொகை மீளளிப்பு | வட்டிக் கொடுப்பனவுகள் | மொத்தம் |
|---|---|---|---|
| *2014* | *107.0* | *69.9* | *176.9* |
| *2015* | *187.1* | *77.2* | *264.3* |
| *2016* | *145.1* | *101.1* | *246.2* |
| *2017* | *219.3* | *138.5* | *357.8* |
| *2018* | *307.0* | *184.5* | *491.5* |

*வரைபு 8.4 வெளிநாட்டுப் படுகடன் சேவைக் கொடுப்பனவுகள்*




***மூலங்கள்:*** *நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் நிதிக் கூற்றுக்கள்*

#### *8.2.3.1.2* நிலுவையாகவுள்ள வெளிநாட்டுப் படுகடன் கையிருப்பு

*நிலுவையாகவுள்ள மொத்த வெளிநாட்டுப் படுகடன்களின் கையிருப்பு 2017 ஆம் ஆண்டின் இறுதியில் 4,356.3 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. இது 2018 ஆம் ஆண்டின் 1,388.4 பில்லியன் ஆல் அதிகரித்து 5,744.7 ஆகும். 2018ம் ஆண்டின் இறுதியில் பிரதானமாக வெளிநாட்டுப் படுகடன் கையிருப்புக்கள், செயற்திட்ட மற்றும் நிகழ்ச்சித் திட்டக் கடன்களை உள்ளடக்கியிருந்தது.*

*அட்டவணை 8.8: 2014 -2018 காலப்பகுதியில் நிலுவையாகவிருந்த வெளிநாட்டுப் படுகடன் கையிருப்பு*

*ரூபா பில்லியன்*

| *வருடம்* | *2014* | *2015* | *2016* | *2017* | *2018* |
|---|---|---|---|---|---|
| *நிலுவையாகவுள்ள படுகடன் கையிருப்பு* | *2,615.0* | *3,200.4* | *3,780.7* | *4,356.3* | *5,744.7* |

*மூலங்கள்: நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் நிதிக் கூற்றுக்கள்*

#### *8.2.3.1.3* வெளிநாட்டுக் கொடைகள்

*பல்தரப்பு மற்றும் இரு தரப்பு மூலங்களிலிருந்தும் அபிவிருத்திப் பங்காளர்களிடமிருந்தும் கிடைக்கப்பெற்ற வெளிநாட்டு உதவிகள், மீளாய்வாண்டிலும் தொடர்ச்சியாகக் கிடைக்கப்பெற்றன. இவ்வருடத்தில் திறைசேரிக்குக் கிடைத்த மொத்த வெளிநாட்டு கொடைகள் 2018 ஆம் ஆண்டில் 55 சதவீதத்தால் அதிகரித்து 12.48 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது.*

அட்டவணை 8.9 : 2014-2018 காலப் பகுதியில் பதிவாகிய வெளிநாட்டு நன்கொடைகள்

ரூபா பில்லியன்

| வருடம் | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|---|
| பதிவாகிய மொத்த வெளிநாட்டு கொடைகள் | 9.40 | 6.01 | 7.50 | 8.03 | 12.48 |

### 8.3. திறைசேரிச் செயற்பாட்டு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள வரியல்லா வருமானம் சேகரிப்பு

*திறைசேரிச் செயற்பாடுகள் பணிப்பாளர் நாயகம், வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் என்ற வகையில் 11 வருமான தலைப்புக்களை மேற்பார்வை செய்கின்றார். திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்தின் கீழ் உள்ள இந்த 11 வருமானத் தலைப்புக்களில் இரண்டு வருமானத் தலைப்புக்கள் துணைக் கடன்களின் மீளச் செலுத்தல்கள் மற்றும் வட்டி சேகரிப்புக்கள் என்பவற்றுக்குப் பொறுப்பாக உருவாக்கப்பட்டுள்ள அதேவேளை ஏனைய இரண்டு வருமானத் தலைப்புக்கள் வெளிநாட்டுக் கொடைகளுக்காகவும் திறைசேரி முறிகளின் பிரிமியம் தொகைகளுக்ககாகவும் ஒதுக்கப்பட்டுள்ளன. மீதி 7 வருமானத் தலைப்புக்களும் ஒரு தனியான திணைக்களத்துக்கு அல்லது அமைச்சுக்கு நேரடியாக ஒதுக்கப்பட முடியாத வருமானங்களைச் சேகரிப்பதற்கான தலைப்புக்களாகும். பின்வரும் 09 வரியல்லா வருமானத் தலைப்புக்களின் கீழ் 86.6 பில்லியன் ரூபாவை வரியல்லா வருமானமாக இத்திணைக்களம் சேகரித்தது. இது மீளாய்வு செய்யபட்ட இந்த வருதிற்கான மொத்த வரியல்லா வருமான மதிப்பீடான 216.0 பில்லியன் ரூபாவின் 40.1 சதவீதமாகும்.*

அட்டவணை 8.10 திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களம்/ பணிப்பாளர் நாயகத்தினால் சேகரிக்கப்பட்ட வரியல்லா வருமானம் - 2017 - 2018 (ரூபா. மில்லியன்)

| வருமான விபரம் | 2017 | | 2018 | |
|---|---|---|---|---|
| | வருமான மதிப்பீடு | சேகரிக்கப்பட்ட வருமானம் | வருமான மதிப்பீடு | சேகரிக்கப்பட்ட வருமானம் |
| **வரியல்லா வருமானம்** | | | | |
| ஏனைய வாடகைகள் | 278.0 | 358.7 | 120.0 | 1,791.5 |
| கடன் வழங்கல் வட்டி | 4,300.0 | 4,648.6 | 4,300.0 | 6,212.8 |
| ஏனைய வட்டி | 1,650.0 | 2,746.8 | 1,300.0 | 1,927.6 |
| திணைக்கள விற்பனைகள் | 110.0 | 120.7 | 117.0 | 162.3 |
| நானாவிதமானவை | 5,000.0 | 6,143.4 | 11,500.0 | 8,642.7 |
| தண்டங்கள் மற்றும் பறிமுதல்கள் - ஏனையவை | 2,600.0 | 1,507.0 | 2,100.0 | 1,582.0 |
| ஏனைய பெறுகைகள் | 11,000.0 | 12,894.8 | 15,000.0 | 37,456.5 |
| ஏனைய நடைமுறை மாற்றல்கள் | 1,750.0 | 2,078.8 | 2,000.0 | 3,260.8 |
| மூலதனச் சொத்துக்களின் விற்பனை | 16,250.0 | 16,418.1 | 16,800.0 | 25,583.6 |
| துணைக் கடன் மீள் அறவீடு | 100.0 | 144.1 | - | - |
| **வரியல்லா வருமானம் உப மொத்தம்** | **43,038.0** | **47,061.0** | **53,237.0** | **86,619.80** |


இவை தவிர 2018 ஆம் ஆண்டில் 09 வரியல்லா வருமானத் தலைப்புக்களில், வெளிநாட்டுக் கொடைகளின் கீழ் இத்திணைக்களத்தினால் 12.5 பில்லியன் ரூபாவைச் சேகரிக்க முடிந்ததுடன் திறைசேரி முறிகளின் பிரிமியங்களின் கிழ் 582.2 மில்லியன் ரூபா பதிவாகியது. அந்த வகையில், மீளாய்வாண்டில் இத்திணைக்களம் 11 வருமானத் தலைப்புக்களின் மூலம் 99.7 பில்லியன் ரூபாவை வருமானமாகச் சேகரித்துள்ளது.

**8.4 திறைசேரி உத்தரவாதங்கள்**

பொதுத் தொழில்முயற்சிகள் 2003 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க அரசிறை முகாமைப் (பொறுப்பு) சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு உட்பட்ட வகையில் நிதி நிறுவனங்களிடமிருந்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்களைப் பெறுவதற்கு கடன் உத்தரவாதங்களைச் சமர்ப்பிக்குமாறு அத்தொழில்முயற்சிகளிடம் கோரப்படுகின்ற போது திறைசேரித் தொழிற்பாடுகள் திணைக்களம் அத்தொழில்முயற்சிகளுக்கு திறைசேரி உத்தரவாதங்களையும் நாணய உத்தரவாதங்களையும் வழங்குகின்றது.

2018 ஆம் ஆண்டின் இறுதி வரையில் திறைசேரிச் செயற்பாட்டு திணைக்களம் 1,102.73 பில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உத்தரவாதங்களையும் நாணய உத்தரவாதங்களையும் வழங்கியிருந்தது. அவற்றில் 44.84 சதவீதமான உத்தரவாதங்கள் மின்சக்தி மற்றும் எரிசக்தித் துறைக்கு வழங்கப்பட்டுள்ளது..

**வரைபு 8.5 திறைசேரி உத்தரவாதங்களின் துறைவாரியான உள்ளடக்கம் - 2018**




**8.5 கடன் வழங்கல்**

கடன்பெறுகை நிறுவனங்களை உள்ளடக்கியிருந்தது. உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பானிய முகவரகம் என்பன அவசிய உட்கட்மைப்பு மேம்பாடுகள் மூலம் நாட்டை அபிவித்தி செய்யும் நோக்குடன் வழங்குநர்களிடமிருந்த சலுகை அடிப்படையில் கிடைக்கப்பெறும் பிரதான கடன்களைப் பயன்படுத்தி இந்தத் துணைக் கடன்கள் வழங்கப்படுகின்றன. திறைசேரி செயற்பாடு திணைக்களம் பணத்தை விடுவித்தல் மற்றும் உப கடன் தவணை கொடுப்பனவுகளை சேகரித்தல் மூலதனக்

*கொடுப்பனவு,வட்டிகொடுப்பனவுகள் மற்றும் தரவுகளை பராமரித்தல் ஆகும்.*

*புதிய உபகடன் 11.87 பில்லியன் இத்திணைக்களத்தால் விடுவித்தல் இந்த வருடத்தில் மற்றும் அது பொதுத் தொழில்முயற்சிகள், வர்த்தக வங்கிகள், அபிவிருத்தி வங்கிகள்ள, பிரதேச அபிவிருத்தி வங்கிகள் உள்ளிட்ட 25.58* பில்லியன் நிதி கடன் தொகையாக மீள பெறுவதறக்கு திணைக்களத்தற்கு முடிந்ததது. இதற்கு மேலதிகமாக கடன் வட்டி வலுமானமாக 6.21 பில்லியன் ரூபா வருடத்திளுள் அறவிடப்ட்டுள்ளது.

அரச வியாபார வணிக வங்கி, அபிவிருத்தி வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி ஆகிய அரச நிறுவனங்கள் 50 ற்கு கிட்டிய நிறுவனங்களுக்கு வழங்கிய உபகடன் தொகையில் 2018 வருட முடிவில் மீதி 184.16 பில்லியன் ஆகும்.

**வருமானத்திலிருந்து மீண்டும் கொடுப்பனவு செய்தல்**

2018 ம் வருடத்தினுள் அரச வருமானத்தில் மீண்டும் பெற்றுக் கொள்வதற்காக திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திடம் முன்னளிப்புச் செய்யப்பட்டுள்ள விண்ணப்பங்கள 1,728 தொடர்பாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது அதற்கிணங்க மீண்டும் செலுத்தப்பட்ட நிதி 1.*2* பில்லியன் ஆகும்.

.

***8.6 திறைசேரி தனிக் கணக்கு முறைமை மற்றும் திறைசேரி நிதி முகாமை முறைமை***

*அரசாங்க அமைச்சுக்களினதும் திணைக்களங்களினதும் பயனுறுதி வாய்ந்ததும் வினைத்திறன்மிக்கதுமான நிதி முகாமைக்கு பொருத்தமான வங்கி முறைமையொன்று காணப்படுவது அவசியமாகும். நாட்டிலுள்ள வங்கி முறைமையை வலையமைப்பொன்றின் மூலம் இணைத்ததன் ஊடாக அரச நிதிகளைப் பயனுறுதி வாய்ந்ததும் வினைத்திறன்மிக்கதுமான முறையில் பயன்படுத்தும் நோக்கில், திறைசேரி தனிக் கணக்கு முறைமையொன்றைத் (TSA) அறிமுகப்படுத்தியது.*

*இதன் கீழ் திறைசேரியின் பிரதிச் செயலாளரின் பெயரில் உள்ள 2018.12.31 இல் உள்ளவாறான உத்தியோகபூர்வ வங்கிக் கணக்குகளின் எண்ணிக்கை 2,144 ஆகக் காணப்பட்டது. அந்தக் கணக்குகளின் வங்கிகளின் அடிப்படையிலான பரம்பலைப் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.*


*அட்டவணை 8.11 திறைசேரி தனிக் கணக்கு முறைமையின் கீழுள்ள உத்தியோகபூர்வ வங்கிக் கணக்குகள்*

| | இலங்கை வங்கி | மக்கள் வங்கி | இலங்கை மத்திய வங்கி | மொத்தம் |
|---|---|---|---|---|
| திறைசேரி தனிக் கணக்கு முறைமையின் கீழுள்ள உத்தியோகபூர்வ வங்கிக் கணக்குகள் | *1,380* | *729* | *0* | *2,109* |
| திறைசேரியின் பிரதிச் செயலாளரின் பெயரில் பேணி வரப்படும் பிரதான உத்தியோகபூர்வ வங்கிக் கணக்குகள் | *1* | *1* | *10* | *12* |
| திறைசேரி தனிக் கணக்கு முறைமைக்கு வெளியே உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் பேணி வரப்படும் சேகரிப்புக் கணக்குகள் | *17* | *6* | *0* | *23* |
| **மொத்தம்** | ***1,398*** | ***736*** | ***10*** | ***2,144*** |

திறைசேரி தனிக் கணக்கு முறைமையை அறிமுகம் செய்ததன் ஊடாக வங்கிகளுடனான நிதிக் கொடுக்கல் வாங்கல்களை பயனுறுதி வாய்ந்த முறையில் சிக்கனமாக முகாமை செய்ததன் மூலம் திறைசேரியின் பிரதிச் செயலாளரின் பிரதான கணக்குகள் மீதான வங்கி மேலதிகப்பற்றுக்களையும் அவற்றுக்கான செலவுகளையும் குறைக்க முடிந்தது. அதனால், திறைசேரி தனிக் கணக்கு முறைமை நாடு முழுவதிலும் உள்ள அரசாங் வங்கிக் கணக்குகளில் காசு மீதிகள் பயன்படுத்தப்படாதிருப்பதைத் தவிர்க்க முடிந்துள்ளது.

2018 ஆம் ஆண்டில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அமைச்சுகள், திணைக்களங்கள், மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள் என்பற்றிலுள்ள அரசாங்கத்தின் கணக்குகளிலுள்ள நாளாந்தச் சராசரிக் காசு மீதி அண்ணளவாக 47.29 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. திறைசேரி தனிக் கணக்கு முறைமையின் ஊடாகத் திறைசேரியின் பிரதிச் செயலாளரின் பிரதான கணக்குகளுக்குத் இந்த கணக்கு மீதிகளைத் தற்காலிகமாகப் பயன்படுத்தக்கூடியதாக இருப்பதனால் ரூபா 4.80 பில்லியன் ரூபா வட்டிச் செலவினம் சேமிக்கப்பட்டது. திறைசேரி தனிக் கணக்கு முறைமை இல்லாதவிடத்து மேலதிகப்பற்றுக்கான மொத்த வட்டிச் செலவு 34.36 சதவீதத்தால் அதிகரித்திருக்கும். இந்நிலைமையைப் பின்வரும் வரைபு விலக்குகின்றது.

வரைபு 8.6 தனிக் கணக்கு முறைமையின் செயலாற்றுகை – 2018



***8.7 ஆதனக் கடன் உத்தரவாத நிதியம்***

*ஒவ்வொரு அரசாங்க ஊழியருக்கும் வீட்டு ஆதனம் போன்ற பெறுமதியான சொத்தொன்றை பெற்றுக் கொள்வதற்கான வசதி ஏற்பாட்டைச் செய்து கொடுக்கும் நோக்கில் 2005 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் வங்கி முறைமையின் ஊடாக அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான புதிய கடன் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. கடன் உத்தரவாத நிதியமானது கடன்பெற்றவர்களின் மரணம் அல்லது நிரந்தர அங்கவீனத்தின் காரணமாக வங்கிகளுக்கு ஏற்படக்கூடிய இழப்புச் சாத்தியங்களைத் தணிக்கும் நோக்கில் திறைசேரித் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் தாபிக்கப்பட்டது.*

*இந்த வகையில் திறைசேரி முறிகளை விதை மூலதனமாக விநியோகிப்பதன் மூலம் இந்நிதியம் 916 மில்லியன் ரூபா ஆரம்ப முதலீட்டுடன் 2005.08.05 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இந்த முதலீடு 2018.12.31 ஆந் திகதி வரையில் 1,385 மில்லியன் ரூபா வரையில் முன்னேற்றகரமாக அதிகரித்துள்ளது.*

*அட்டவணை 8.12 ஆதனக் கடன் உத்தரவாத நிதியத்தின் மூலம் செய்யப்பட்ட தீர்ப்பனவுகளின் முன்னேற்றம் 2005 - 2018*

| வருடம் | 2005 -2016 | 2017 | 2018 | மொத்தம் |
|---|---|---|---|---|
| மரணித்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை | 509 | 72 | 81 | 662 |
| நிரந்தரமாக அங்கவீனமுற்ற மற்றும் மருத்துவக் காரணங்களுக்காக ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை | 36 | 06 | 03 | 45 |
| மொத்தத் தீர்ப்பவனவு ரூபா. மில் | 423.5 | 59 | 69 | 551.5 |

*மேலே தரப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளது போன்று, மரணித்த/ நிரந்தரமாக அங்கவீனமுற்ற/மருத்துவக் காரணங்களுக்காக ஓய்வுபெற்ற 707 அரசாங்க உத்தியோகத்தர்களின் கடள் மீதியான 551.5 மில்லியன் ரூபா இறுதி கொடுப்பனவு உரிய அரசாங்க வங்கிகளுக்குச் செலுத்தப்பட்டதன் காரணமாக அவர்கள் பயனடைந்தனர். பயனுறுதி வாய்ந்ததும் வினைத்திறன்மிக்கதுமான நிதிய முகாமையின் ஊடாக அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படும் வசதிகளை மேம்படுத்த வேண்டும் என்பதே திணைக்களத்தின் அவாவாகும்.*

***8.8 திறைசேரி நிதி முகாமை முறைமை(TFMS)***

*நிதி முகாமைத் தகவல்களுக்கான தேவைகளைப் பூர்த்தி செய்து முறைமையின் பயனர்-நட்புறவுத் தன்மையை உறுதிப்படுத்தும் நோக்கில் 2008 ஆம் ஆண்டில் திறைசேரி நிதி முகாமை முறைமை (TFMS) அறிமுகப்படுத்தப்பட்டது. இம்முறைமையின் வினைத்திறனை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான முகாமைத்துவ மீளாய்வுகளின் விளைவாக, இம்முறைமையின் தொழில்நுட்ப மற்றும் ஏனைய பராமரிப்புக்கும் மேம்பாட்டுக்கும் பொறுப்பாகவுள்ள வாடிக்கையாளர் நிறுவனத்தினால் 2018 ஆம் ஆண்டில் இம்முறைமை மேலும் மேம்படுத்தப்பட்டது. இந்த முறைமையினுள் முகாமைத்துவ அறிக்கைகளை தயார்படுத்தக்கூடியதாக உள்ளமை திணைக்களத்தினால் அன்றாடம் எடுக்கப்படும் முக்கியமான முகாமைத்துவத் தீர்மானங்களுக்குப் பெரிதும் உதவியாக அமைந்துள்ளது. இம்முறைமையானது*

திரட்டு நிதியத்தின் பெறுகைகள் மற்றும் கொடுப்பனவுகள் உள்ளிட்ட அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களையும் மேற்கொள்வதற்கான வசதிகளைக் கொண்டுள்ளதுடன் நாள் முடிவுக் காசு நிலைமை அறிக்கையையும் முகாமைத்துவத்தின் மதிப்பீட்டு வழங்குகின்றது. இந்த முறைமையின் ஊடாகத் தயாரிக்கப்படும் தகவல்கள் பயனுறுதி வாய்ந்த தீர்மானம் எடுத்தலுக்கான ஒரு முகாமைத்துவக் கருவியாக உயர் முகாமைத்துவத்தினால் பயன்படுத்தப்படுகின்றது.

2018 ஆம் ஆண்டில் திறைசேரிச் செயற்பாட்டு திணைக்களம் மொத்தமாக ரூபா 5,815.0 பில்லியன் ரூபாவைப் பெறுகையாகப் பெற்றதுடன் மொத்தக் கொடுப்பனவு ரூபா 5,826.0 பில்லியனாகப் பதிவாகியது. மொத்தப் பெறுகையான 5,815.0 பில்லியனில் 99.45 சதவீதம் (5,782.9 பில்லியன்) திறைசேரியின் பிரதிச் செயலாளின் கணக்கிற்கு இலத்திரனியல் முறையில் கிடைக்கப்பெற்றது. மேலும், 5,826.0 பில்லியன் கொடுப்பனவுகளில 98.84 சதவீதம் (5,758.3 பில்லியன்) காசோலைகளைப் பயன்படுத்தாது மத்திய வங்கி, இலங்கை வங்கி, மக்கள் வங்கி என்பவற்றின் ஊடாகச் செலுத்தப்பட்டுள்ளன. இப்பெறுவனவுகளும் கொடுப்பனவுகளும் 6,072 உட்செலுத்தல் வவுச்சர்கள் மூலமும் 18,168 கொடுப்பனவு வவுச்சர்கள் மூலமும் மேற்கொள்ளப்பட்டன. இவை தவிர வங்கிகளுக்கு இடையிலான 1,450.2 பில்லியன் ரூபா பெறுமதியான 343 வங்கிப் பரிமாற்றங்கள் அதே நேர மொத்த உள்ளீட்டுத் தீர்ப்பனவு (Real Time Gross entry Settlement -RTGS) முறையின் ஊடாக மேற்கொள்ளப்பட்டன.

### 8.9 எதிர்கால சவால்களை வெற்றிகொள்வதற்கான உபாயங்கள்

ஒருங்கிணைந்த திறசேரி முகாமைத்துவ தகவல் முறைமை (ITMIS)

ஒருங்கிணைந்த் திறைசேரி முகாமைத்துவ தகவல் முறைமை என்பது செயற்திரனான வரவுசெலவு திட்ட முகாமைத்துவம் கட்டுப்பாடு, காசுமுகாமை மற்றும் நிதி ஒழுக்கத்தன்மை இலகுபடுத்த உதவுகிறது. இது ஒரு சர்தேச நாணய நிதியம் (IMF) உடனான நாட்டின் நீடிக்கபட்ட நிதிவசதி (EFF) திட்டத்திற்கான கட்டமைப்பு ஆகும். திறைசேரி செயற்பாடு திணைக்களம் ITMIS செயலாக்க செயற்பாட்டின் இணை உறுப்பினராக வடிவமைத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் திறன் அபிவிருத்தி உட்கட்டமைப்பு அபிவிருத்தி குறிப்பாக செலவீட்டு முகவர்களை மற்றும் அலகுகளை ஒருங்கிணைத்தல் என்பன முக்கிய கடமைகள் ஆகும்.